மையூரா நதியின் குறுக்கே மேம்பாலம்

* 794 வினு —திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

கள்ளக்குறிச்சி தாலுக்காவிலுள்ள அசகளத்தூர் அருகே ஓடும் மையூரா நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

இரும்பூதிப்பட்டி, கொசூர் சந்தைகள்.

* 795 வினு : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 8—12—1971 அன்று பேரவையில் 158 எண்ணுள்ள கேள்வியை ஒட்டிய துணைக் கேள்விக்கு அளிக்கப்பட்ட விடையின் தொடர்பாக மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம் இரும்பூதிப்பட்டி, கொசூர் சந்தையை 1970–71-ல் ஏலம் எடுத்தவர் கட்ட வேண்டிய பாக்கித் தொகையை வசூலிக்க கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதா?

(இ) மொத்தம் எவ்வளவு தொகைக்கு எந்தத் தேதியில் தாக்கல் செய்யப்பட்டது ?

(உ) தொகை உடனடியாக வசூலிக்க உடன் ஜப்திக்குக் கோரப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை. ஏனெனில் ஏலதார் பாக்கித் தொகை முழுவதையும், மேலும் அபராதத் தொகை வட்டித் தொகை முழுவதையும் கட்டிவிட்டார் என்று மாவட்ட ஆட்சியாளர் இப்போது அறிவித்துள்ளார்.

(இ) (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே நான் முன்பொருமுறை வினுவை எழுப்பிய நேரத்தில் கோர்ட்டிலே இருக்கிறது என்ற தகவலைக் கொடுத்தார்கள். இப்போழுது இல்லை யென்ற பதில் வந்திருக்கிறது. நாளை என்ன பதில் வருமோ ? இப்படித் தவருன தகவல்களை இந்த மாமன்றத்திற்குத் தருவதைப் பற்றி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முன்பு சொன்ன பதில், இரும்பூதிப் பட்டியிலுள்ள சந்தை ரூ. 32,101வுக்கும், கொசூரிலுள்ள சந்தை ரூ. 13,001-வுக்கும் ஏலம் விடப்பட்டன. இரும்பூதிப் பட்டி சந்தைக்காக செலுத்தப்